# EVM மோசடி : நரியின் தந்திரங்களை சிங்கத்தின் துணை கொண்டு வெல்வோம்!



**மோ**டியின் தவறான பொருளாதாரக் கொள்கையால் தொடர்ந்து உயரும் விலைவாசி, அதிகரிக்கும் பணவீக்கம், விண்ணை முட்டும் வேலையில்லா திண்டாட்டம், ஏழைகளுக்கு எட்டாக் கனியாக மாறி நிற்கும் தங்கம், பாதுகாப்பின்றி பலவீனப்பட்டுப்போன எல்லை, அதிகரித்துள்ள கருப்புப்பணம் என்று எல்லா துறைகளும் பாழ்பட்டு நின்றாலும் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல்களிலும், வடமாநில சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் பா.ஜ.க. வெற்றி பெற்றுக் கொண்டே இருப்பது வியப்பின் உச்சம்.

பலரும் இது குறித்து விவாதித்து வந்தாலும், வாக்குப்பதிவு இயந்திரத்தில் மோசடி நடப்பதாக அவ்வப்போது தகவல்கள் வந்தாலும் அது மிகப் பெரும் விவாதமாக மாறாமலேயே நின்றது. தற்போது, ராகுல்காந்தி அவர்கள் டெல்லியில் பத்திரிக்கையாளர்களை அழைத்து நேரலையில், தரவுகளுடன் தேர்தல் ஆணையத்தின் தில்லு முல்லுகளை, பா.ஜ.க.வின் திருடப்பட்ட வெற்றியை தரவுகளுடன் தோலுரித்தபோது இந்தியா மட்டுமின்றி உலக நாடுகளும் கொஞ்சம் அதிர்ந்துதான் போயின.

**ஆம், ஒரு ஜனநாயக நாட்டின் கடைசிக் குடிமக்களுக்கும் இருக்கும் ஒற்றை நம்பிக்கை என்பதே அவர்களது வாக்குரிமைதான். பா.ஜ.க. வின் பதவி வெறியால் அதுவும் திருடப்படும் போது அது ஜனநாயகத்தின் மீதே நம்பிக்கையின்மையை ஏற்படுத்திவிடும். ராகுல்காந்தி வெளியிட்ட தரவுகள் அத்தகையவே.**

**2024 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த நேரம், சில நிமிடங்கள் வாரணாசித் தொகுதியில் மோடி பின்னடைவு என்று செய்திகள் வந்தபோது, எதிர்க் கட்சிகளே கூட அதிர்ச்சியில் உறைந்தன. ஆனால், சாமானிய மக்கள் அச்சூழலை தெளிவாகப் புரிந்து கொண்டனர். காரணம், அடுத்த சில நிமிடங்கள் ஊடகங்களில் வாரணாசி குறித்த தெளிவான செய்திகள் ஏதும் இல்லை. அடுத்த சில மணி நேரங்களில் மோடி முன்னிலை என்றும் தொடர்ந்து மோடி வெற்றி என்றும் செய்திகள் வெளியானபோது தேசத்தின் குடிமக்களுக்கு தேர்தல் ஆணையத்தின் மீதான ஐயம் வலுப்பெற்றிருந்தது. அந்த ஐயங்களை வலுப்படுத்துவது போல் அமைந்துள்ளது ராகுல்காந்தி வெளியிட்ட தரவுகள்.**

2024 மக்களவைத் தேர்தலில் கர்நாடக மாநிலம், மகாதேவபுரா தொகுதியில் மட்டும் 1 லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளில் முறைகேடுகள் நடந்துள்ளன என்று தரவுகளுடன் நிறுவினார் ராகுல். குறிப்பாக, குர்கிராத் சிங் தங் என்ற ஒரே வாக்காளரின் பெயர் 4 வெவ்வேறு வாக்குச்சாவடிகளில் பதிவாகியிருந்தது.

ஆதித்ய ஸ்ரீவத்சவா என்ற 39 வயது வாக்காளருக்கு கர்நாடகா, உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மூன்று மாநிலங்களிலும் வாக்குரிமை இருப்பது தரவுகளுடன் அம்பலமானது.

வீட்டு எண் சுழியம் (0) என்றும், சில இடங்களில் வீட்டு எண் சுழியம் சுழியம் ( 00 ) என்றும் குறிப்பிடப்பட்டு அங்கேயும் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டிருந்ததை ராகுல் சுட்டிக்காட்டிய போது மனசாட்சி உள்ளோர் அதிர்ந்து போனார்கள்.

இலக்கம் 35 என்ற வீட்டு முகவரியில் 10 முதல் 15 சதுர அடி அளவு கொண்ட சிறு வீட்டில் 80 வாக்காளர்கள் இருப்பதாக தேர்தல் ஆணையத்தின் தரவுகள் சொல்கின்றன. இது நியாயமா என்று ராகுல் எழுப்பிய கேள்விக்கு இதுவரை தேர்தல் ஆணையத்திடம் இருந்து முறையான பதில் ஏதும் இல்லை. இந்த முகவரியைத் தேடிச் சென்றன தேசிய ஊடகங்கள். அங்கே அவர்களுக்கு காத்திருந்தது பேரதிர்ச்சி. அந்த வீட்டில் ஒரே ஒரு நபர் அதுவும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர் வசிப்பது தெரியவந்தது. அந்த வீட்டின் உரிமையாளர் பா.ஜ.க. ஆதரவாளர் என்பதை அவரே ஊடகங்களிடம் சொன்னபோது அந்த ஐயம் மேலும் உறுதியானது.

இதே தொதியில் 60க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் ஒரே முகவரியில் இருப்பதை அறிந்து அங்கு சென்றால் அது ஒரு பீர் தயாரிக்கும் ஆலை என்பதை அறிந்தபோது அதிர்ச்சி மேலும் மேலும் அதிகமானது.

பீகார் தேர்தலில் எப்படியேனும் வெற்றி பெறுவதற்காக, 65 லட்சம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கியுள்ளது பா.ஜ.க.வின் கைப்பாவையாக மாறி நிற்கும் தேர்தல் ஆணையம். இது தொடர்பாக எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பினால், உள்துறை அமைச்சர் அமித்ஷா அந்த வாக்காளர்களை எல்லாம் ஊடுருவல்காரர்கள் போல சித்தரிக்கிறார்.

**காங்கிரசும் இந்தியா கூட்டணியும் ஊடுரு வல்காரர்களின் வாக்குகளை நம்பித்தான் உள்ளது என்று பிரச்சினையை திசை மாற்றுகிறார். பீகாரில் மட்டும் 65 லட்சம் பேர் ஊடுருவி வசித்து வருகிறார்கள் என்று சொல்ல வருகிறாரா அமித்ஷா? பா.ஜ.க.வின் ஆட்சிக்காலத்தில் பாதுகாப்புத்துறையும், உள்துறையும் முற்றிலும் தோற்றுப் போய் விட்டன என்று ஒப்புதல் வாக்குமூலம் தருகிறாரா ?**

**நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்கள் யார் ?**

அவர்களில் எத்தனை பேர் இறந்து போனவர்கள்? எத்தனை பேர் இடம் பெயர்ந்தவர்கள் ? என்பதை அறிந்து கொள்வதற்காக நீக்கப்பட்ட வாக்காளர்களின் பட்டியலைக் கேட்டு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்படுகிறது. நீதிமன்றமும் இந்த விபரங்களை வழங்குமாறு உத்தரவிடுகிறது. ஆனால், தேர்தல் ஆணையமோ, நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் விவரத்தை தர முடியாது என்று சொன்னதோடு சட்டத்தில் அதற்கு இடமில்லை என்றும் மறுத்துவிட்டது. தேர்தல் ஆணையத்தின் இதுபோன்ற செயல்பாடுகள் அதன் நம்பகத்தன்மையை சுக்கு நூறாக உடைக்கின்றன.



**“ தமிழ் கேள்வி”**
**தி.செந்தில் வேல்**
மூத்த ஊடகவியலாளர்

ஹரியானா தேர்தலுக்குப் பின், மெஹ்மூத் பிராச்சா என்ற வழக்கறிஞர் ஹரியானா உயர் நீதிமன்றத்தில் 2024 ம் ஆண்டு ஒரு வழக்கை தாக்கல் செய்கிறார். அந்த வழக்கில், ஹரியானா தேர்தலின் வாக்குச்சாவடி கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காணொளிகள் மற்றும் படிவம் 17 சி ஆகியவற்றை வழங்க வேண்டும் என்று கேட்கிறார். ஹரியானா உயர் நீதிமன்றமும், அவர் கேட்ட விவரங்களை வழங்க வேண்டும் என்று உத்தரவிடுகிறது. இந்த உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்த அடுத்த சில வாரங்களில் ஒன்றிய அரசு தேர்தல் நடத்தும் சட்டத்தையே திருத்துகிறது. இதுபோன்ற விவரங்களைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்பது போன்ற திருத்தங்களோடு 45 நாட்களுக்கு மேல் சிசிடிவி காட்சிகளை பாதுகாக்க அவசியமில்லை என்றும் அதை அழித்து விடலாம் என்றும் விதிகள் மாற்றப்படுகின்றன.

இப்படி பா.ஜ.க.வின் வெற்றிக்கு ஏற்றவாறு அனைத்து விதிகளையும் மாற்றி, ஒப்புகைச் சீட்டை எண்ண மறுத்து, போலி வாக்காளர்களைச் சேர்த்து, இசுலாமிய, தலித் வாக்காளர்களை லட்சக்கணக்கில் நீக்கி பா.ஜ.க. பெறுவது வெற்றியல்ல அது வாக்குத் திருட்டு.

கர்நாடகத் தேர்தலில் தேர்தல் ஆணையத்தின் தில்லுமுல்லுகள் குறித்து ராகுல் எழுப்பிய கேள்விகளின் அதிர்ச்சி குறைவதற்குள், பீகாரில் 3 லட்சம் வாக்காளர்களின் வீட்டு முகவரி எண் சுழியம் ( 0 ) என்று பதிவாகியுள்ளதை சுட்டிக்காட்டி தேஜஸ்வி யாதவ் எழுப்பியுள்ள கேள்வி அடுத்த இடியாய் இறங்கியுள்ளது.

சொந்த நாட்டு மக்களுக்கு தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, அனைத்திற்கும் கட்டாயம் என்று பாஜக அரசால் நம் மீது வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்ட ஆதார் உள்ளிட்ட ஆவணங்கள் வைத்திருப்போரை எல்லாம் வாக்காளர்களாக ஏற்க முடியாது என்று தேர்தல் ஆணையம் உச்ச நீதிமன்றத்தில் கூறியிருப்பதை எண்ணி அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. சொந்த நாட்டு மக்களுக்கு, அவர்களை ஆளும் அரசால் கொடுக்கப்படும் அடையாள அட்டைகளைக் கூட ஏற்க மறுப்பது அநீதியின் உச்சம்.

பிறப்புச் சான்றிதழைக் காட்டி இந்தியர் என்பதை உறுதி செய்யுங்கள் என்று ஊடக விவாதங்களில் கத்திக் கூச்சலிடுகின்றனர் பாஜக ஆதரவாளர்கள். கல்வியறிவு மேம்பட்ட தமிழ்நாடு போன்ற மாநிலங்களிலேயே 1970 – 80 வரைப் பிறந்த பலருக்கும் பிறப்புச் சான்றிதழ் இருப்பதில்லை. எனில் பீகார் போன்ற பின் தங்கிய மாநிலங்களில் வாழும் போதிய கல்வியறிவு போய்ச் சேராத, அப்பாவி மக்களிடம் எப்படி பிறப்புச் சான்றிதழ்கள் இருக்கும்.?

இது குறித்தெல்லாம் கேள்வி எழுப்பினால் பாதிக்கப்பட்ட மக்களை ஊடுருவல்காரர்கள் என்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. இத்தனை பேர் இந்தியாவுக்குள் ஊடுருவியுள்ளனர் எனில் அதற்குப் பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் அமித்ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் பதவி விலக வேண்டும்.

நீதிமன்றங்கள் கொடுக்கும் உத்தரவுகளையும் ஏற்க மறுக்கிறது தேர்தல் ஆணையம். நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக விவாதிக்க மறுக்கிறது மோடி அரசு. இந்த நிலையில் டெல்லியில் தேர்தல் ஆணையத்திடம் நேரில் சென்று புகார் அளிக்கலாம் என்று 11.08.2025 அன்று இந்தியா கூட்டணியைச் சேர்ந்த ராகுல் காந்தி, பிரியங்காகாந்தி உள்ளிட்ட 300க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேரணியாகச் சென்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்தி கைது செய்துள்ளது டெல்லி காவல் துறை.

**யார் தங்களை ஆளவேண்டும் என்பதை மக்களால் தீர்மானிக்கப்படும் தேர்தலில் இருக்கும் இத்தனை மோசடிகள் குறித்து மக்கள் மன்றத்திலும், நாடாளுமன்றத்திலும், நீதிமன்றத்திலும் என எங்குமே பேசக்கூடாது என்று மோடி அரசு நினைப்பதுதான் பாசிசத்தின் உச்சம்.**

இதுபோன்ற கேள்விகளுக்கு நேரடி பதிலைச் சொல்லாமல் தமிழ்நாட்டில் மட்டும் தி.மு.க. வெல்கிறதே அது எப்படி ? எனில் தேர்தல் ஆணையம் நேர்மையாகத்தான் தேர்தலை நடத்துகிறது என்ற வாதங்களை வைக்கின்றனர் பா.ஜ.க. ஆதரவாளர்கள். பக்கத்து வீட்டில் திருடு போயுள்ளது என்று புகார் அளித்தால் அது எப்படி உங்கள் வீட்டில் மட்டும் திருடு போகவில்லை என்பது போன்ற கேள்விதான் இது.

எங்கள் வீட்டிலும் திருட தொடர்ந்து முயற்சிகளை பா.ஜ.க.வும், தேர்தல் ஆணையமும் பல்வேறு வழிகளில் செய்து கொண்டுதான் இருக்கின்றன. ஆயினும் வட மாநிலங்களை விட கல்வியறிவில் முன்னேறிய மக்களாலும், தி.மு.க. எனும் மாபெரும் இயக்கத்தின் வீரியமிக்க தொண்டர்களாலும், லட்சக்கணக்கான வாக்குச்சாவடி முகவர்களாலும், இவை அனைத்திற்கும் தலைமைத்தாங்கி வழிநடத்தும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் ஈடு இணையற்ற தலைவராலும் தமிழ்நாடு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தோழர்களே ! கழக ஆட்சியின் இந்த 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட நலத்திட்டங்களைப் போல் வேறெந்த ஆட்சியும் இதுவரைத் திட்டங்களைத் தந்ததில்லை. நம் நலத்திட்டங்களால் பலன் பெற்ற மக்கள் நிச்சயம் மீண்டும் தி.மு.க.விற்கு வாக்களிப்பார்கள். 2026 தேர்தலிலும் திமுக இமாலய வெற்றியைப் பெறும் என்பதில் துளியும் ஐயமில்லை.

**ஆயினும் தோழர்களே, நம் கருத்தியல் எதிரிகள் அபாயமானவர்கள், அவர்கள் அறத்திற்கு புறம்பாக எவ்வழியில் ஆயினும் நம் வெற்றியைத் தடுத்திட சதிகளோடு காத்திருக்கின்றனர். அவர்களின் சதிகளை முறியடித்து நாம் மீண்டும் வென்றிட ஓரணியில் திரள்வோம். கருத்து வேறுபாடுகளைக்களைவோம். வாக்குகளை சிந்தாமல் சிதறாமல் நம் அணிக்கு சேர்த்திட விழிப்புடன் உழைப்போம் வெற்றிக் கனியை நம் முதலமைச்சரின் கரங்களில் கொடுப்போம் என உறுதியேற்போம்.**

**மலரட்டும் திராவிடம் 2.0 !**

**வெல்லட்டும் தமிழ்நாடு !**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘முதலமைச்சரின் தாயுமானவர்’ திட்டத்தை தொடங்கிவைத்ததை முன்னிட்டு வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் திருவலத்தில் நீர்வளம் மற்றும் நீதித்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணைத் தலைவர் எஸ்.சரவணன், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கழகத் துணைப் பொதுச் செயலாளரும் சென்னை மண்டலப் பொறுப்பாளருமான ஆ.இராசா எம்.பி. நேற்று சென்னை மண்டல அளவில் காணொலிக் காட்சி வாயிலாக மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி பொறுப்பாளர்களுடன் ‘ஓரணியில் தமிழ்நாடு’ கழக உறுப்பினர் சேர்க்கை இயக்கம் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனை வழங்கினார்.

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

## கழக இலக்கிய அணி நிர்வாகிகள் கூட்டம்!

### வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

கழக இலக்கிய அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (14.08.2025 – வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு அண்ணா அறிவாலயத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார்.

இதில் அனைத்து மாநில நிர்வாகிகளும் கலந்து கொண்டு வரஇருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – முதலமைச்சர் ஆணைப்படி செயல்படுவது பற்றி கலந்து ஆலோசனை செய்யப்படும் எனவே மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

### மாதவரத்தில் கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சி!

சென்னை, ஆக. 13–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய இளைஞர் அணி சார்பில் புழல் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.குறளரசன் ஏற்பாட்டில் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, அறிவுறுத்தலின்படி, புழல் ஒன்றிய கழக பொறுப்பாளர் ச.அற்புதராஜ் தலைமையில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் கிராண்ட்லைன் ஊராட்சியில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மரியாதை செலுத்தி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படத்திற்கு மரியாதை செலுத்தி தூய்மை பணியாளர்களுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டது.

இதில் மா.மணி, செ.யுவராஜ், யு.பிரேம்குமார், ஐயப்பன், ஏ.மணிமாறன், ஏ.வினோத், பொன் நடராஜ், மனோதீபன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.